

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.1.2025) ஆங்கிலப் புத்தாண்டு தினத்தையொட்டி சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு உள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.1.2025) ஆங்கிலப் புத்தாண்டு தினத்தையொட்டி சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு உள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.1.2025) வேளாண்மை – உழவர் நலத்துறையின் கீழ் செயல்படும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் சென்னை, கதீட்ரல் சாலையில் உள்ள செம்மொழிப் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள நான்காவது சென்னை மலர்க் கண்காட்சியை தொடங்கி வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, மரு. நா. எழிலன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ் குமார், நிலைக்குழு தலைவர் நே. சிற்றரசு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் செல்வி அபூர்வா, வேளாண்மைத் துறை இயக்குநர் பி. முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.1.2025) வேளாண்மை – உழவர் நலத்துறையின் கீழ் செயல்படும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் சென்னை, கதீட்ரல் சாலையில் உள்ள செம்மொழிப் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள நான்காவது சென்னை மலர்க் கண்காட்சியை தொடங்கி வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, மரு.நா.எழிலன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு. மகேஷ் குமார், நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் செல்வி அபூர்வா, வேளாண்மைத் துறை இயக்குநர் பி.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.1.2025) வேளாண்மை – உழவர் நலத்துறையின் கீழ் செயல்படும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் சென்னை, கதீட்ரல் சாலையில் உள்ள செம்மொழிப் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள நான்காவது சென்னை மலர்க் கண்காட்சியை தொடங்கி வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, மரு.நா.எழிலன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ் குமார், நிலைக்குழு தலைவர் நே. சிற்றரசு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் செல்வி அபூர்வா, வேளாண்மைத் துறை இயக்குநர் பி.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.1.2025) வேளாண்மை – உழவர் நலத்துறையின் கீழ் செயல்படும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் சென்னை, கதீட்ரல் சாலையில் உள்ள செம்மொழிப் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள நான்காவது சென்னை மலர்க் கண்காட்சியை தொடங்கி வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, மரு.நா.எழிலன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு. மகேஷ் குமார், நிலைக்குழு தலைவர் நே. சிற்றரசு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் செல்வி அபூர்வா, வேளாண்மைத் துறை இயக்குநர் பி.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பத்திரிகையில் வந்துள்ள செய்தி தவறானது!

# அரசுப் பள்ளிகளை தனியாருக்குத் தாரை வார்க்க மாட்டோம்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விளக்கம்!

சென்னை,ஜன.3–

தேசிய கட்சியின் மாநில தலைவராக உள்ள அண்ணாமலை, பள்ளிக்கல்வித்துறை குறித்து வெளிவந்த தகவலில் உண்மை தன்மை அறியாமல் வார்த்தைகளால் விளையாடக் கூடாது.

பள்ளிக்கல்வித்துறையில் பயிலும் மாணவர்களை தத்துக்கொடுக்கவோ, தாரை வார்க்கவோ அவசியமில்லை ; எங்களது பிள்ளைகளை நாங்கள்தான் வளர்த்தெடுப்போம் என அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்தார்.

சென்னை தலைமைச்செயலகத்தில் சட்டமன்றத்தில் பள்ளிக் கல்வித் துறை சார்பில் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் நிலை மற்றும் எதிர்காலத்தில் பள்ளிக்கல்வித்துறையை மேம்படுத்த மேற்கொள்ள வேண்டிய வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்து பள்ளிக்கல்வித்துறை அலுவலர்களுடன் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆலோசனை நடத்தினார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கூறியதாவது:–

அரசு பள்ளிகள் குறித்து பத்திரிகைகளில் வந்த செய்தி தவறானது. தனியார் பள்ளிகள் சங்க நிகழ்ச்சியில் அவ்வாறு பேசியுள்ளேனா என்பதை தெரிந்து கொள்ளாமல் வெளியிடப்பட்ட அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. உறுதிப்படுத்தாமல்



அறிக்கை வெளியிட்டவர்களுக்கு, பள்ளிக்கல்வித்துறை அதிகாரிகள் சார்பாக கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிறேன். எஸ்.எஸ்.ஏ. நிதியை கொள்கைகளை விட்டுக் கொடுத்து ஒன்றிய அரசிடம் பணத்தை வாங்க வேண்டாம் என தெரிவித்தவர் முதலமைச்சர். பள்ளி மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு கூடுதல் நிதி சுமையை ஏற்றுள்ளது.

### தொடர்ச்சியாக தவறான செய்திகள்!

தொடர்ச்சியாக தவறான செய்திகளை வெளியிட்டு ஒவ்வொரு முறை விளக்கம் அளித்து சோர்வடைகிறோம். பள்ளிக்கல்வித்துறையில் பயிலும் பிள்ளைகள் எங்கள் பிள்ளைகள் என்றும் நாங்கள்தான் வளர்த்து எடுக்க வேண்டும். இதை யாருக்கும் தத்துக்கொடுக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. கல்வியை மாநில பட்டியலுக்கு கொடுத்து விடுங்கள், எங்களது பிள்ளைகளை நாங்களே வளர்த்துக்கொள்கிறோம். எஸ்.எஸ்.ஏ. நிதி வராத பட்சத்தில் திட்டங்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். ஒன்றிய அரசு நிதி தராமல் இருப்பது தமிழ்நாடு அரசுக்கு விடுக்கும் மிரட்டலாகத்தான் பார்க்கிறோம். நம் பள்ளி நம் பெருமை திட்டத்திற்கு ரூ.540 கோடி சி.எஸ்.ஆர். நிதி வந்துள்ளது. தற்போது வரை 350 க்கும் மேற்பட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. இனி வரும் நிதியை பெண் பிள்ளைகள் படிக்கும் பள்ளிகளில் கழிவறையை மேம்படுத்த பயன்படுத்தப்படும்.

தேசிய கட்சியின் மாநில தலைவர் அண்ணாமலை, ஒரு தகவல் வந்தால் அதில் உண்மை தன்மை உள்ளதா என்பதை ஆராயமல் எக்ஸ் தளத்தில் பதிவிடுவது சரியா என்றும் தேசிய கட்சியின் தலைவர் ஒரு பதிவை உறுதிப்படுத்தாமல் பதிவிட்டால் மற்றவர்கள் கிண்டலடிக்க மாட்டார்களா என கேள்வி யெழுப்பினார். 44 ஆயிரம் கோடி ரூபாய் என்ன ஆனது என்பதை தெரிந்து கொள்ள இரண்டு மாதத்தில் மானிய கோரிக்கை அறிவிக்கிறேன், காத்திருக்கவும் என அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பதிலளித்தார். மேலும், கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் ஓடாத வண்டியாக இருந்த பள்ளிக்கல்வித்துறை தற்போது இந்த மூன்று ஆண்டுகளில் வண்டியை நகர்த்தி வருகிறோம். பழைய படத்தில் வருவது போல வண்டியை தள்ளு தள்ளு என குரல் மட்டும் கொடுக்கக் கூடாது அது அந்த வண்டி எப்படி செயல்படுகிறது என்பதை பார்க்க வேண்டும். பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை வார்த்தையால் விளையாடக் கூடாது.

அரசுப் பள்ளிகளின் மேம்பாடு தொடர்பாக தவறான தகவல் பரப்பப்படுவதாக அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கண்டனம் தெரிவித்துள்ளார். அரசுப் பள்ளிகளை தனியார் பள்ளிகள் தத்தெடுப்பதாக வெளியான செய்தி முற்றிலும் தவறானது என்றும் அவர் கூறியுள்ளார்.

சென்னை தலைமை செயலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, அரசுப் பள்ளிகளை தனியார் பள்ளிகள் தத்தெடுப்பதாக வெளியான செய்தி தவறானது என்று தெரிவித்தார். உண்மையான தகவலை தெரிந்து கொள்ளாமல் இதுபோன்ற செய்திகளை வெளியிட வேண்டாம் என்றும், உண்மையை தெரிந்து கொள்ளாமல் சிலர் கண்டனம் தெரிவிப்பது வேதனை அளிப்பதாக உள்ளது என்றும் கூறினார். தனியார் நிறுவனங்களின் நிதியை பயன்படுத்தி அரசு பள்ளிகளின் தரத்தை மேம்படுத்துவது குறித்து பேசியதாகவும் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விளக்கம் அளித்துள்ளார்.




தலைமைச் செயலகத்தில் நேற்று (02.01.2025) உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தலைமையில் பொங்கல் பரிசுத்தொகுப்பு விநியோகம், பொது விநியோகம், சட்டமன்ற அறிவிப்புகளின் முன்னேற்ற நடவடிக்கைகள் மற்றும் துறை சார்ந்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் ஜெ. ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு சேமிப்புகிடங்கு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சு. பழனிசாமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் ஆ.அண்ணாதுரை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு இணைச் செயலாளர் அமர்குஷ்வாஹா, உணவுப் பொருள்வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் த.மோகன், கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (நுகர்வோர்பணிகள்) திருமதி காயத்ரிகிருஷ்ணன் மற்றும் துறை சார்ந்த உயர்அலுவலர்கள் கலந்து கொண்டனர்.